# இருபதாவது அகவை நிறைவு விழா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கல்விக் கழகம்

## யேர்மனி

### வூப்பெற்றால் தமிழாலயத்தின் இருபதாவது அகவை நிறைவு

### சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழாலய கீதம்

கல்வியும் கலையும்
நம் இரு கண்கள்
நல்தமிழ் மொழி
எங்கள் உயிராகும்

பன் மொழிக்கல்வியும்
பல் கலை நுட்பமும்
பயிற்றுவிக்கும் தமிழாலயம்
எங்கள் தமிழாலயம்

தன்மானத் தமிழர்
பண்பாடதனை
தரணியில் பரப்பிடும் தமிழாலயம்
எங்கள் தமிழாலயம்

பாலகர் நாங்கள்
பாடி ஆடி
படித்து மகிழும் ஆலயம்
எங்கள் தமிழாலயம்

பாவலர் போற்றிட
நாவலர் வாழ்த்திட
என்றென்றும் வாழிய தமிழாலயம்
எங்கள் தமிழாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனமுவந்த வாழ்த்துக்கள்



மொழி என்பது ஒரு இனத்தின் கடந்தகால வரலாற்றை தன்னுடன் அடக்கிக்கொண்டிருக்கும் ஒலிவடிவ, வரிவடிவ ஆவணம். அவ்வினத்தின் நீண்டபாரம்பரியத்தை, பண்பாட்டுவளர்ச்சியை, பொருளியல் வளர்ச்சியின் கடந்தகாலப் படி நிலைகளை நினைவூட்டிக்கொண்டிருக்கும் ஒரு வரலாற்று வடிவம். இது பண்பாட்டுக்கருவூலத்தை தலைமுறை தலைமுறையாகக் கடத்திக் கொண்டிருக்கும் உன்னத கருவியாகும். ஒரு இனத்தை அடிமைபடுத்தவும் அழிக்கவும் மிகசிறந்தவழி அந்த மொழியின் சுய அடையாளத்தை அழித்துவிடுவதுதான், என ஒரு மொழியியல் ஆய்வாளர் கூறுகிறார். இக்கூற்றை உண்மைப்படுத்தும் நடவடிக்கையே சுதந்திரத்தின் பின் ஆட்சிபீடத்தில் இருப்பவர்கள் ஈழத்தில் நடைமுறைப்படுத்திவரும் அரசியலாக நீண்டு கொண்டு போகிறது.

இந்நிலையை முறியடித்து, எமது சுய உரிமைகளை நிலை நாட்ட ஈழத்தின் உள்ளேயும் வெளியேயும் வாழும் தமிழர்களின் ஒன்றிணைந்த செயற்பாடுகளே இன்றைய அத்தியாவசியமான தேவையாக இருக்கிறது. உலகெங்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழர், விதைகளை உண்டுவிட்டு தாம் பறந்துதிரியும் இடமெங்கும் எச்சமிடும் குருவிகள் போல, தமது பண்பாட்டு விழுமியங்களைப் பரப்புவதில் அக்கறை கொண்டுள்ளனர். புலம் பெயர்ந்து வாழும் தமிழரின் இளைய சந்ததி தாய்மொழிக்கல்வியின்றி அந்நியமாவதைத் தடுக்கும் நோக்கில் ஆங்காங்கே தமிழ் கற்பிக்கின்ற முன்னெடுப்புக்களை மேற்கொண்டு உள்ளனர் என்பது உண்மை எனினும், ஐரோப்பிய நாடுகளென்ன, உலகநாடுகளிலேயே தாய் மொழிக்கல்வியில் இன்று முன்னனியில் நிற்பது யேர்மனி ஒன்றுதான் என்பது மறைக்கமுடியாத உண்மையாகும்.

கல்விப் பணியினால் 21ஆண்டுகளாக வளர்த்து வளப்படுத்தப்பட்டுவரும் தமிழாலயங்களில், இன்று 970 ஆசிரியர்கள் 260 நிர்வாகிகள் 7000 வரையிலான மாணவர்களையும் தன்னகத்தே கொண்டு, செழித்துவளர்ந்து நிமிர்ந்து நிற்பது அனைவரும் அறிந்த விடயம். தமிழாலயங்களில் கற்கும் மாணவர்கள் தேச இன மொழிபற்று மிகுந்தவர்களாக, யேர்மன் மொழியுடன் தமிழையும் கற்றுத்தேறி தமிழாலயங்களில் ஆசிரியப்பணிகளையும், மற்றும் தமிழின முன்னெடுப்புக்கான நிகழ்வுகளிலும் பங்கேற்று வருவது பெருமை தரத்தக்கது.

இந்நிலையில்தான் வூப்பெற்றால் நகரமமைந்த தமிழாலயமும் தனது 20வது அகவையை நிறைவுசெய்து விழாக்கோலம் பூண்டுள்ளமை மகிழ்ச்சி தரும் செய்தியாகும். 1991ல் 24மாணவர்களும், இரு ஆசிரியர்களுடன் திரு பொன் பீற்றர் அவர்களின் நிர்வாகத்துடன் உலகத் தமிழர் இயக்கக் கல்விப் பொறுப்பாளரால் ஆரம்பிக்கப்பட்ட வூப்பெற்றால் தமிழாலயம், மூன்று ஆண்டுகளின் பின் 11.04.1994ல் திருமதி நகுலேஸ்வரி சிவநாதனை நிர்வாகியாகக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுவரை தொடர்ந்து நடாத்தப்பட்டு வருகிறது. இவ்வேளை திருமதி நகுலேஸ்வரி சிவநாதன் பொறுப்பில் எதுவித பிரச்சனைகளுமின்றி தெளிந்த நிரோடையாக இயங்கிவருவதன் காரணம், அவரது சிறந்த வழிநடத்தலேதான் காரணம். அன்பு, பண்பு, பொறுமை, புன்சிரிப்புடன் ஆசிரியர்கள் மாணவர்களுடன் இனிமையாகப்பழகி அனைவரையும் கவர்ந்த ஒரு இனிய உதாரணமான நிர்வாகியாக விளங்குகிறார். திருமதி நகுலேஸ்வரி சிவநாதனுடன் ஆசிரியர்கள் நெருங்கி உறவாடி அன்பு மரியாதையுடன் தம் ஒத்துழைப்பை நல்கி பணியாற்றி வருகிறார்கள். பெற்றோர்களும் தம்பிள்ளைகளை தேச மொழிப்பற்றுடன் பள்ளிக்கு அனுப்பி ஒத்தாசைகள் புரிந்து வருகிறார்கள். மாணவ மணிகளும் தமிழ்பாண்பாடு மிளிர வளர்ந்து வருகிறார்கள். இவர்கள் அனைவரின் ஒத்துழைப்புதான் இன்று வூப்பெற்றால் தமிழாலயம் மத்திய மாநிலத்தில் 140 மாணவமணிகளையும் 15ஆசிரியர்களையும் உள்ளடக்கிய சிறந்த ஒரு முன்னோடித் தமிழாலயமாக உயர்த்தியிருக்கிறது.

1995ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் மாவீரர் வெற்றிக்கிண்ணப் போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளனர். தமிழ்திறன் போட்டி, அதாவது பாடசாலை மாநிலம் இறுதிப்போட்டி ஆகியவற்றில் தோற்றி முதன்நிலையைப் பெற்றுள்ளனர். 1991ல் பொதுத்தேர்வில் 20 மாணவிகள் பங்குபற்றினர், ஆனால் 2010ல் 140 மாணவர் பங்கு கொண்டுள்ளனர். இவையனைத்துக்கும் மேலாக பட்டிமன்றங்கள், இசை, நடனம், நாட்டிய நாடகம் போன்ற கலைகள் இங்கு வளர்க்கப்பட்டுவருகின்றன. திருமதி சவித்திரி. இமானுவேல் ஆசிரியையின் நெறிப்படுத்தலில் வூப்பெற்றால் தமிழாலயமணவிகள் பற்பல மேடைகளை அலங்கரித்துள்ளமை தமிழாலயத்துக்குப் பெருமைதரும் விடயமாகும். இங்கே 25மாணவர்கள் இறுதிவரை கற்று வெளியேறியுள்ளனர். தற்போது 5 மாணவிகள் ஆசிரியப்பணியிலும் உள்ளனர் என்பது பெருமையுடன் குறிப்பிடப்படுகிறது.

ஆகவே இந்த 20ஆண்டுகாலத்தில் தமிழாலயம் படைத்த சாதனைகளைப் பட்டியலிடலாம். இதன் வளர்ச்சிக்குப் பின் புலத்தில் நின்று உதவியோர் பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள், நிர்வாகம் என அனைத்துச்சாராருக்கும் தமிழ்க் கல்விக் கழகச் சார்பிலும், வூப்பெற்றால் தமிழாலயத்தை ஆரம்பித்து வைத்ததோடு, ஆரம்பகாலத்தில் கற்பித்தவன் என்றமுறையிலும், என்சார்பிலும் நன்றியையும் பாரட்டுகளையும் தெரிவித்துகொள்கின்றேன். அத்தோடு மேன்மேலும் இத்தமிழாலயம் பல வெற்றிப்படிகளை எட்டி வளர்ச்சி கண்டு எதிர்கால இளையோருக்கு வழிகாட்ட வேண்டும் எனவும், இந்த 20வது அகவை விழா சிறப்புறவும் மீண்டும் வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கின்றேன்.

இரா.நாகலிங்கம்
பொறுப்பாளர்
தமிழ்க்கல்விக்கழகம்
யேர்மனி

"மொழி ஒரு இனத்தின் உயிர்மூச்சு
மொழி இழந்தவன் தன் முகத்தை இழக்கின்றான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்க் கல்விக் கழகம் யேர்மனி

Tamilische Bildungsvereinigung e.V.

*Bildung, Kultur und Sport*

ஸ்ருற்காட், 24.04.2011

அன்புடையீர் !

வணக்கம்



மொழியும், கலையும், பண்பாடுமே ஒரு தேசிய இனத்தின் உயிரப்பைக்காட்டுகின்றன. தமிழின் தொன்மைக்கு நிகரான அதன் நிகழ்கால எதிர்கால வளர்ச்சி அமையவேண்டும். அவன் எங்கு வாழ நேரினும் அங்கெல்லாம் தனது இன, மொழி, பண்பாட்டு அடையாளங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புக்கு உட்படுகின்றான். வூப்பெற்றால் வாழ் தமிழ் மக்கள் இப்பணியைத் திறம்படச் செய்ததன் அறுவடையை அவர்களின் 20 வது அகவை நிறைவினூடாகக் காணும்போது பெருமிதம் அடைகின்றோம்.

கிளைகளென நினைத்து முறித்து எறியப்பட்டவர்கள் வேர்களாய் இறங்கி விளைந்து செழித்ததன் தகுதிச் சான்றே தமிழாலயங்கள். எம் சிறார்கள் மொழியாலும், பண்பாடுகளாலும் இரட்டிப்புச் சுமைகளுக்கு மத்தியில் வாழ்கின்றார்கள். கிடைக்கும் ஒய்வு நேரங்களைத் தமது தாய்மொழிக் கல்விக்காகச் செலவிடுகின்றார்கள். இந்த முயற்சிகளினால் யேர்மன் பள்ளிகளிலும் சமூகத்திலும் ஏனைய மாணவர்களைவிட அவர்கள் தம்மை முதன்மைப்படுத்தி நிற்பதையும் காண்கின்றோம். தமிழ்ப் பண்பாடுகளைத் தமது பிள்ளைகளுக்குக் கைமாற்றுச் செய்வதில் பெற்றோர்களும் பல சிரமங்களையும் செலவீனங்களையும் சந்திக்கின்ற போதிலும், அவை அனைத்தையும் ஒரு சவாலாக ஏற்று எம்மோடு இணைந்து நின்று செயற்படுகின்றார்கள். பண்பட்ட நிலத்துப் பயிர் செழித்தோங்கும் என்பது பொய்யாமொழி. இந்த அடிப்படையில் வூப்பெற்றால் நகரம் தலைசிறந்த களமாக அமைகின்றது.

ஒரு தமிழாலயம் தனது இலக்கை அடைவதற்கு நிர்வாகிகள், ஆசிரியர்களின் சேவை மிக அவசியமாகின்றது. அந்தவகையில் வூப்பெற்றால் தமிழாலய ஆசிரியர்கள் கடந்த 20 ஆண்டுகளும் சேவை அடிப்படையில் தமிழினத்துக்குப் பல புத்திஜீவிகளையும், பண்பாளர்களையும் உருவாக்கித்தந்துள்ளனர். ஆசிரியர்களின் சிறந்த செயற்பாட்டுக்குச் சிகரம் வைத்தாற்போல வூப்பெற்றால் தமிழாலயம் கடந்த 20 ஆண்டுகளுக்குள் கல்வித்தரத்திலும், விளையாட்டுத்திறனிலும் நாடுதழுவிய ரீதியில் சிறந்த நிலைக்கு வளர்ந்துள்ளது. நிர்வாகியாச் செயலாற்றும் திருமதி. ந.சிவநாதன் ( அக்கா ) அவர்களின் சிறப்பான செயற்பாடுகளும், பெற்றோர், ஆசிரியர்களின் ஒற்றுமை நிறைந்த ஒத்துழைப்புக்களையும் இந்த இனிய நாளில் மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.

கடந்த 21 ஆண்டுகளில் யேர்மனியில் தமிழர் வாழும் பகுதிகளில் அங்காங்கே தமிழாலயங்களை அமைத்து 6500க்கு மேற்பட்ட தமிழ்ச்சிறார்களுக்கு தமிழ்பயிற்றுவித்துவரும் எமக்கு வூப்பெற்றால் நகரில் வாழும் தமிழர்களின் அடுத்த சந்ததியினர் தமிழை மறந்து விடுவார்களோ என்ற அச்சம் 20 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது உண்மையே. இப்பொழுது அந்த அச்சம் தவிர்ந்து மகிழ்கின்றோம். அதற்கு உங்கள் அனைவரின் உயர்ந்த பணியே பொறுப்பு. நாம் என்ன சேவை செய்கின்றோம் என்று புரிந்துகொண்டு அதை ஒழுங்காகச் செய்தாலே போதும். எல்லாம் நன்றாக அமையுமென்று கூறி வூப்பெற்றால் தமிழாலயம் மேலும் சிறப்பாக வளர வாழ்த்துகின்றேன்.

கல்வியும் கலையும் நம்மிருகண்கள் நல்தமிழ்மொழி எங்கள் உயிராகும்

நன்றி

செ.லோகன்.
பொறுப்பாளர்
செயலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Liebe tamilische Tanzgruppe,

wir gratulieren Euch zum 20 jährigen Jubiläum.

als Ihr vor ca. 2 Jahren zum ersten Mal in das Spielplatzhaus Hardt gekommen seid und wir Eure schönen Kostüme gesehen haben, dachten alle Kinder und Betreuer sofort an „Bollywood".

Mit großem Interesse und Begeisterung haben wir Eure Tänze angesehen. Dabei viel uns auf, wie intensiv und diszipliniert alle Tänzerinnen arbeiten.

Durch Euer Tanztraining im Spielplatzhaus haben wir einen tollen Eindruck von einer anderen Kultur erhalten, was auch für unsere deutschen Kinder interessant ist, denn sie sehen, dass tamilische Tänze nichts mit „Bollywood" zu tun haben.

Für die Zukunft wünschen wir Euch, dass Ihr weiter Eure Kultur pflegen könnt und unser Leben damit bunter und reicher wird.

Verena Glöß

Leiterin Spielplatzhaus Hardt

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப்பணி தொடர நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்.



உலகம் புகழும் நன்நூல் தந்த உயர்வான செம்மொழி ஆகிய தமிழ்மொழி, உலகில் தோன்றிய முதல் மொழி என்ற பெருமைக்குரியது. என்பதை இறுதியாக இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில், பல மொழிகளை ஆய்வுசெய்த மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இம்மொழிக்குரிய தமிழினம், சிங்களன் சதிக்குள் சிக்குண்டு, சிதறிப் புலம்பெயர்ந்து, அன்னிய மண்ணில் அதிவேகம் நிறைந்த வாழ்வியலில் வெவ்வேறு துன்பங்களுக்கு மத்தியிலும், உறுதியுடன் உழைத்து யேர்மனியில் உயர்ந்த ஆல மரமாகத் தமிழ்க் கல்விக் கழகம் வளர்ந்து நிற்கிறது.

இந்த ஆலமரமாகிய தமிழ்க் கல்விக் கழகத்தின் ஓர் விழுதாகத் தாங்கி நிற்கும் வூப்பெற்றால் தமிழாலயம், இன்று தனது இருபதாவது அகவையை இன்பமாகக் கொண்டாடுகின்றது. இந்தத் தமிழாலயம் பல மாணவர்களை சிறந்த முறையிற் பயிற்றுவித்து, நல்ல தேசப்பற்றுள்ளவர்களாகவும், மொழிப் பற்றுள்ளவர்களாகவும் வளர்த்து விட்டுள்ளது. இந்த இலக்கை அடைவதற்கு ஊன்றுகோலாக இருப்பவர் நிர்வாகி திருமதி நகுலேசுவரி சிவநாதன். இவருடன் இணைந்து இத்தமிழாலய ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரும் சிறந்த முறையிற் தமது பணிகளைச் செய்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இத்தமிழாலய மாணவர்கள் தமிழ்க் கல்விக் கழகம் நடாத்தும் பொதுத்தேர்வு, தமிழ்த்திறன்போட்டி, விளையாட்டுப்போட்டி கலைநிகழ்வுகள் யாவற்றிலும் பங்குபற்றி பல பரிசில்களைத் தமதாக்கி, தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். வூப்பெற்றால் தமிழாலயம் இன்னும் பல மாணவர்களை உள்வாங்கி அவர்களை ஆற்றல் மிகுந்தவர்களாகவும், அறிவிற் சிறந்தவர்களாகவும், தமிழின உணர்வாளர்களாகவும் உருவாக்க வேண்டுமென உவகை பொங்க வாழ்த்துகின்றேன்.

வாழ்க தமிழாலயம்! தொடர்க உங்கள் பணி!

நன்றி

செ.தெய்வேந்திரன்
செயற்பாட்டாளர்
மத்தியமாநிலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991



2001



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என் நினைவலைகள்

இயற்கையின் படைப்பில் மானிடப்படைப்பு, உயர் நிலையை அடைந்தாகவும், ஆளுமை கொண்டதாகவும் கருதப்படுகின்றது. இயற்கையின் தன்மைகளை உணர்ந்து, அதற்கேற்ப தமது அறிவைப்பயன்படுத்தி, பரிணாம வளர்ச்சியில் உன்னத நிலையை அடைந்துள்ளது மனித இனம். அந்த உன்னத நிலையிலேயே பல மனித இனங்கள் உலகில் தோன்றியுள்ளது. அவற்றுள் தமிழினம் மிகத்தொன்மை வாய்ந்த இனமாகவும், மொழி, கலைபண்பாட்டு விழுமியங்களின் உச்ச நிலையை அடைந்த இனமாகவும் மிளிர்கின்றது. அந்த நிலையில் "செம்மொழி" எனப் போற்றப்படும் தமிழ் மொழியை உலகெலாம் பரவச்செய்து, புலம்பெயர் தமிழ் சிறார்களின் உணர்விலும், ஆழ் மனதிலும் தமிழரின் அடையாளத்தை பதியம் வைத்து, மிகச்சிறப்பாக செயற்பட்டு வரும் "தமிழ்க்கல்விக்கழகம்" புலம்பெயர் தமிழர்களின் இன அடையாள ஆணிவேராக ஊன்றி நிற்கின்றது.

வானின் விரிவைப் போன்று பரந்து விரிந்து, தமிழர்கள் புலம் பெயர்ந்த நாடுகளிலெல்லாம் தமிழாய் ஊற்றெடுத்துச் செழித்தோங்கிய நாடுகளின், மூலவேராய், இருபத்தோராவது அகவை கண்டு பெருமிதத்துடன் நிமிர்ந்து நிற்கும் யேர்மனி "தமிழ்க்கல்விக்கழகத்தின்" கிளைகளில் ஒன்றான, எமது "வூப்பெற்றால் தமிழாலயம்" இருபதாவது அகவை கண்டு ஒளிவீசி நிற்கின்றது. இந்த இனிய வேளையில், எமது தமிழாலயத்தின் செயற்பாட்டையும், வளர்ச்சியையும் பகிர்ந்து கொள்வதில் நாம் பெருமை கொள்கிறோம்.

1991ம் ஆண்டுக் காலப் பகுதியில், வூப்பெற்றால் நகரச் செயற்பாட்டாளர்களின் எண்ண வெளிப்பாட்டிற்கு அமைய உலகத்தமிழர் இயக்கத்தினால், தை மாதம் 19ம் திகதி காலை 10.00 மணி அளவில் உலகத்தமிழர் இயக்க கல்விப் பொறுப்பாளர் தமிழேந்தல் திரு. நாகலிங்கம் ஐயா அவர்களால் வூப்பெற்றால் மாலர் (malar)வீதியில் அமைந்த சிறுகட்டிடம் ஒன்றில் தமிழாலயம் தொடங்கி வைக்கப்பட்டது. அந்தவேளையில் வூப்பெற்றால் தமிழாலய நிர்வாகியாக திரு. யோ.பீற்றர் பொன்கலம் அவர்களும், துனண நிர்வாகியாக திரு.இராஜகுமாரசாமி அவர்களும், பெற்றோர் நிர்வாகியாக திரு. நாகராஜா அவர்களும் உ.த.இ கல்விப்பொறுப்பாளரால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அன்றைய தினம் பன்னிரெண்டு பெற்றோர்கள், தமது பிள்ளைகளை தமிழுணர்வோடு வூப்பெற்றால் தமிழாலயத்தில் இணைத்தனர். முதல் நாளான்று இருபைந்தைந்து பிள்ளைகள் தமிழ்மொழி கற்க இணைந்தது இன,மொழி பற்று நிறைந்த பெருமைக்குரிய விடயமாகும். தொடக்கப்பட்ட தமிழாலயத்தின் ஆசிரியர்களாக தமிழேந்தல் திரு. நாகலிங்கம் ஐயா அவர்களும், திரு.இராஜகுமாரசாமி அவர்களும் செயற்பட்டனர்.

அன்றைய காலகட்டத்தில் தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்து வந்த தமிழர்கள், வாழ்விட வசதி, வேலைவாய்ப்பு, பொருளதாரநிலை, குடியமர்வு உறுதியற்ற சிக்கலான சூழ்நிலையில் தாயக பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டு திரு.பீற்றர் பொன்கலம் அவர்களும், திரு.இராஜகுமாரசாமி அவர்களும் சிறப்பாக வழிநடாத்தினார்கள். இந்த இனிய வேளையில் அவர்களின் பணியை, நன்றியுணர்வோடு நினைவு கூறுகின்றோம். 1994ம் ஆண்டு முற்பகுதியிலிருந்து செல்வி. அமரர் மங்கையர்கரசி. கந்தையா அவர்கள் ஆறுமாத காலமாக தற்காலிக பொறுப்பாளராக தமிழாலயத்தை வழிநடத்தியதோடு மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் அன்பு நிறைந்த பணியாளராக செயற்பட்டார். பின்பு -

உலகத்தமிழர்இயக்க பொறுப்பாளர் திரு. காங்கேசமூர்த்தி அவர்களிடம் தனது தற்காலிக பொறுப்பை கையளித்தார். இந்த வேளையில் அமரராகிவிட்ட செல்வி மங்கையர்கரசி கந்தையா அவர்களை பெருமிதத்தோடு உணர்வில் பதிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு ஆனிமாதம் 11ம் திகதி 1994ம் ஆண்டு உ.த.க பொறுப்பாளர் திரு. கங்கேசமூர்த்தி அவர்களும், தமிழேந்தல் திரு நாகலிங்கம் ஐயா அவர்களும் வூப்பெற்றால் தமிழாய நிர்வாகத்தை எம்மிடம் கையளித்தனர். அந்த வேளையில் நகர செயற்பட்டாளர்கள் திரு.சிவானந்தராசா அவர்களும், திரு.ஞானேஸ்வரன் அவர்களும் அன்றைய காலகட்டதேவை கருதி, இந்தப் பணியை சிறப்பாக ஆற்ற ஊக்கிகளாகவும், உறுதுணையாகவும் துணைநின்றனர். எமது நிர்வாகத்தில் உதவி நிர்வாகியாக திருமதி. இந்திராதேவி சிவபாலன் அவர்களும், பெற்றோர் நிர்வாகியாக திரு.சந்திரதாஸ் அவர்களும் பணியில் அமர்த்தப்பட்டனர். நாம் பொறுப்பேற்று இப் பணியை நடாத்த தொடங்கிய காலகட்டத்தில் தமிழ்க்கல்விக்கழகப்பொறுப்பாளர் திரு.நாகலிங்கம் ஐயா அவர்கள் பல அறிவுரைகளைக் கூறி நிர்வாகத்தை கையாளும் தன்மைகளை விளக்கியது, எமது செயற்பாட்டிற்கு உந்துதலாக அமைந்தது. அத்தோடு உ.த.இ பொறுப்பாளர் திரு.கங்கேசமூர்த்தி அவர்கள் கூறிய அறிவுரையை நினைத்துப் பார்க்கிறோம். "எந்தநிலையிலும் இப்பணியை தொடரவேண்டும்" என்ற அறிவுரை எமது ஆழ்மனதில் பதிந்து செயலாற்றப்படுகிறது என்பதை, எமது இருபதாவது அகவை உணர்த்தி நிற்கின்றது.

எமது உதவி நிர்வாகியாக செயற்பட்ட திருமதி.இந்திரா சிவபாலன் அவர்கள் எமது நிர்வாகத்திற்கு உறுதுணையாகவும், ஆசிரியையாகவும் செயற்பட்டு நிர்வாக வளர்ச்சிக்கு பங்காற்றியதை இந்த வேளை நன்றியோடு பதிவு செய்துகொள்கிறோம். பெற்றோர் நிர்வாகியாக செயற்பட்ட திரு சந்திரதாஸ் அவர்கள் பெற்றோர்க்கும் நிர்வாகத்திற்கும் பாலமாக நின்று நிர்வாக வளர்ச்சிக்கு பணியாற்றியமை எமது ஆழ்மனதில் உயர்ந்து நிற்கும் விடயமாகும். எமது தமிழாலயத்தின் பெற்றோர் பிரதிநிதியாக செயலாற்றிய திரு. மகேந்திராஜா அவர்கள் சிரித்த முகத்துடன் பெற்றோர்களை அணுகி பணியாற்றிய பாங்கு அனைவர் மனத்திலும் மறக்கமுடியா பதிவை ஏற்படுத்தியுள்ளது. அத்தோடு எமது நிர்வாகத்தின் உதவி நிர்வாகியாக செயலாற்றிய திருமதி. கெங்கதேவி அன்ரன்லிட்வின் அவர்கள் பதினொருவருடங்களாக ஆசிரியைப்பணியை ஆற்றியதோடு, நிர்வாகத்திற்கு தனது முழு ஒத்துழைப்பையும் நல்கியமை எமது உள்ளத்தில் உணர்வோடு பதிந்துள்ளது.

இருபதாவது அகவை காணும் இந்த வேளையில், தமிழ்க்கல்விக்கழத்தால் நாடாத்தப்படும் எமது தமிழாலயத்தோடு தோள் கொடுத்துப் பணியாற்றும் ஆசிரியப் பெருந்தகைகளின் கடமையுணர்வுகளை எடுத்தியம்ப வார்த்தைகள் போதாது. குடும்ப வாழ்வியல் சூழல் ஒரு பக்கம், அன்னிய நாட்டின் கலாச்சார சூழல் ஒரு பக்கம், தாயக உறவுகளின் துயர நிலை ஒருபக்கம், இப்படியாக பல மனச்சுமைகளுக்கு மத்தியிலும், வருங்காலச் சந்ததிகள் நம் தமிழின அடையாளத்தை அழிந்து விடாமல் காக்க, தமிழ் மொழிப் பணியாற்றி தமது இனப்பற்றையும், மொழிப்பற்றையும் காக்கும் கரங்களாக காத்து நிற்பது, எமது தமிழாலயத்தின் வளர்சியின் வேராக ஊன்றி நிற்கின்றது.

இந்த வேளையில் புலம்பெயர் நாட்டுச் சூழலில் வாழும் தமிழினம், இரு பண்பாட்டுச் சூழலில் வாழும் நிலையில், எமது பெற்றோர்கள் பல மாறுபட்ட சூழ்நிலைகளை சந்திக்க வேண்டியுள்ளது. தமது சிறார்கள் வாழும் நாட்டின் இனிய பண்புகள் அழியாமலும், நமது இனப் பண்புகள் அழியாமலும் காக்கவேண்டிய -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் உள்ளனர். அந்த உணர்வின் வெளிப்பாடாகவே நம் இனத்தின் அடையாள வேரோடு ஊன்றி நிற்கும் தமிழாலயத்தில் பதியம் வைத்து மொழிப்பற்றும், இனப்பற்றும் கொண்ட பிள்ளைகளாக வளர்க்கும் பண்பாளர்களாக மிளிர்கின்றனர். அத்தகைய பெருமை வாய்ந்த பெற்றோர்களை பெற்ற எமது தமிழாலயம் நூறாவது அகவையை காணும் என்பதில் ஐயமில்லை.

1991ம் ஆண்டு தொடங்கி இன்றுவரை எமது தமிழாலயத்தில் கல்வி கற்ற மாணவர்களின் தொகை 434 ஆகும். கல்விகற்ற அனைத்து மாணவர்களும் ஓரே கூரையில் நின்று நட்ப்போடு ஆடிப்பாடி, மகிழ்வோடு கல்வி கற்றனர். எமது மாணவர்கள் அன்னிய சூழலில் வாழ்ந்தாலும் தாய் மொழிப்பற்றோடும், இனப்பற்றோடும் வளர்ந்த பிள்ளைகளாகும். தமிழ்க்கல்விக்கழகத்தால் நாடத்தப்படும் தமிழ்திறன் போட்டிகளில் மாநிலரீதியாகவும், யேர்மனி ரீதியாகவும் பல பரிசில்களை பெற்றுள்ளனர். அத்தோடு மாணவர்கள் அமைப்பினால் நாடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஐந்து வருடங்களாக தொடர்ச்சியாக முதலாம் இடத்தை தக்க வைத்துக்கொண்டமை குறிப்பிடதக்கது. எமது தமிழாலய மாணவர்கள் கலை வெளிப்பாட்டின் மூலம் தமிழர்கலைகளை பல நிகழ்வுகளில் நிகழ்த்தியுள்ளனர். குறிப்பாக தமிழர்களின் முக்கிய நிகழ்வுகளில் எமது அடையாளத்தை பதிக்க தவறியதில்லை. எமது தமிழாலயத்தில் கற்ற பழைய மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் கற்றுயர்ந்த நிலையில் உள்ளனர். எங்கள் வேரொடு பதிந்த மாணவமணிகளின் எதிர்காலம் சிறப்புற்று ஓங்கி வளர, நிர்வாகம் சார்பாக தாய்மனதொடு வாழ்த்துகிறோம்.

எமது தமிழாலயத்தின் ஆரம்பகாலம் முதல் நடன ஆசிரியையாக திகழும் திருமதி. சாவித்திரி இம்மானுவல் அவர்களின் பங்களிப்பால், எமது தமிழாலாயத்தில் பல மாணவமணிகள் தமிழோடு, தமிழ் கலையையும் கற்றுக்கொள்ள இணைந்தமை, ஆசிரியையின் நடன செயற்பாட்டின் திறமை, எமது தமிழாலாய வளர்ச்சியில், ஓர் முக்கிய பங்காக பரிமளிப்பது கண்கூடு. இந்த இனிய வேளையில் நடன ஆசிரியையின் பணியினை நன்றியோடு நாம் போற்றுகின்றோம்.

தமிழ்க்கல்விக்கழகத்தின் பணியக செயற்பாட்டின் அங்கமாக திகழும் பணியகப் பொறுப்பாளர் திரு.லோகானந்ம் அவர்கள் எமது நிர்வாகத் தேவைகளை பூர்த்தி செய்வதோடு, எமக்கேற்படும் பல இடர்கள் நீங்க வழி வகுத்து, எமது தமிழாலயம் சிறப்புற நடைபெற ஆலோசனைகள் வழங்கியமையை நாம் இவ்வேளையில் நன்றியோடு உள்ளத்தில் எற்றிக்கொள்கிறோம்.

ஓர் இனம் தன் அடையாளத்தை காத்துக் கொள்வதற்கு மொழியும் பண்பாடும் அவசியமாகிறது. அந்தவகையில் புலம்பெயர்ந்த தேசத்தில் எமது வேரை பதித்து எமது அடையாளத்தை காத்துவரும் தமிழ்க்கல்விக்கழகத்தாருக்கு எமது தமிழாலய நிர்வாக சார்பாக இதயபூர்வமான நன்றியை தெரிவிப்பதில் அக மகிழ்கிறோம்:

“இயற்கைப் படைப்பில் தமிழராய் பிறந்தோம்
இறக்கும் வரையில் தமிழராய் வாழ்வோம்“

திருமதி. நகுலேஸ்வரி சிவநாதன்
நிர்வாகி
தமிழாலயம் வூப்பெற்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் நிர்வாககுழு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வேரோடு இணைந்தவர்கள்

| பெயர் | சேவை | சேவையாற்றியகாலம் |
|---|---|---|
| திரு.இரா. நாகலிங்கம் | ஆசிரியர் | |
| திரு.கீதபொன்கலன் பீட்டர் | நிர்வாகி | 3 ஆண்டுகள் |
| திரு.இராஜ இராஜகுமாரசாமி | உதவி. .நிர்வாகி | 3 ஆண்டுகள் |
| திருமதி. ஜெயந்தி கீதபொன்கலன் | ஆசிரியர் | 3 ஆண்டுகள் 3 மாதம் |
| திருமதி. செல்வமலர் சிறிநந்தகோபால் | ஆசிரியர் | சேவையாற்றுகிறார் |
| திருமதி.ஆன்பிரான்ஸ் | ஆசிரியர் | 1 ஆண்டுகள் |
| திருமதி. இந்திரானி சிவபாலன் | ஆசிரியர் உ.நிர்வாகி | 3 ஆண்டுகள் 9 மாதம் |
| திருமதி. மரியா ஸ்ரனிஸ்லாஸ் | ஆசிரியர் | 1 ஆண்டுகள் 3 மாதம் |
| திருமதி. ஜரின் பிறேமா ட்றுமன் | ஆசிரியர் | 5 ஆண்டுகள் |
| அமரர் செல்வி மங்கை கந்தையா | தற்காலிக குழு பொறுப்பாளர் | 4 மாதம் |
| திரு.இளையதம்பி மோகன் | ஆசிரியர் | 1 ஆண்டுகள் |
| திருமதி நகுலேஸ்வரி சிவநாதன் | நிர்வாகி ஆசிரியர் | சேவையாற்றுகிறார் |
| திருமதி. யோகேந்திரன் | ஆசிரியர் | 6 மாதம் |
| திரு .செபஸ்ரியான் றோமாலிஸ் ஸ்ரிபன் | ஆசிரியர் | சேவையாற்றுகிறார் |
| திருமதி. தெய்வறஞ்சினி கிருதரமூர்த்தி | ஆசிரியர் | சேவையாற்றுகிறார் |
| திருமதி. கெங்காதேவி அன்ரன்லிட்வின் | ஆசிரியர் | 11 ஆண்டுகள் 6 மாதம் |
| திருமதி. சிவலிங்கம் | ஆசிரியர் | 3 மாதம் |
| திரு. பரமன் நடராசா | ஆசிரியர் | சேவையாற்றுகிறார் |
| திருமதி வசந்தகுமாரி நாகரட்னம் | ஆசிரியர் | சேவையாற்றுகிறார் |
| செல்வி. தமிழ்செல்வி வடிவேலு | ஆசிரியர் | 9 மாதம் |
| திருமதி. அனிற்றா றாஜிகெலினி றிச்சாட் | ஆசிரியர் | 2 ஆண்டுகள் 6 மாதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திருமதி.சித்திராதேவி நங்கநாதன் | ஆசிரியர் | 1 ஆண்டுகள்<br>5 மாதம் |
| திருமதி.சசிலேகா ஈஸ்வரலிங்கம் | ஆசிரியர், உதவி. .நிர்வாகி | சேவையாற்றுகிறார் |
| திருமதி.கலாராணி வரதராஜா | ஆசிரியர் | 6 மாதம் |
| திருமதி.சத்தியபாமா ஞனேஸ்வரன் | ஆசிரியர் | 9 மாதம் |
| செல்வி.இந்துமதி செல்லத்துரை | ஆசிரியர் | 8 மாதம் |
| திருமதி.சசிகலா பாஸ்கரன் | ஆசிரியர் | சேவையாற்றுகிறார் |
| திருமதி வேணுகுமாரி லோகநாதன் | ஆசிரியர் | சேவையாற்றுகிறார் |
| திருமதி. கோமதி மதனாகரன் | ஆசிரியர் | சேவையாற்றுகிறார் |
| திருமதி.தேவராணி மகேஸ்வரன் | ஆசிரியர் | 5 ஆண்டுகள் |
| செல்வி அனுசா கணேசமூர்த்தி | ஆசிரியர் | 3 மாதம் |
| செல்வி சொரூபலக்சுமி இரத்தினசிங்கம் | ஆசிரியர் | 10 மாதம் |
| திருமதி வளர்மதி சாந்தகுமார் | ஆசிரியர் | சேவையாற்றுகிறார் |
| திருமதி.வசந்திதேவி சுரேஸ்குமார் | ஆசிரியர் | சேவையாற்றுகிறார் |
| செல்வி .தேவகி கிருதரமூர்த்தி | ஆசிரியர் | சேவையாற்றுகிறார் |
| செல்வி.சிந்துயா மகேந்திரராஜா | ஆசிரியர் | சேவையாற்றுகிறார் |
| திருமதி. ஜெயராணி நவநீதன் | ஆசிரியர் | சேவையாற்றுகிறார் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதம் வாழ கலைகள் படைப்போம்

மாந்தர்களின் மனிதத்தை பேணிக்காத்து, உயர்வுற்று வாழும் ஆணிவேராக திகழ்வது கலை பண்பாடாகும். உலகில் வாழும் பல இனங்களில், தமிழினம் மிகப் பழமை வாய்ந்த சிறப்பான பண்பாடுடைய இனமாகும். ஓர் இனத்தின் கலைபண்பாடுதான் அந்த இனத்தின் சிறப்பையும், இயல்பையும் காட்டும் அடையாளமாகும்.

தமிழர்கள், கலைபண்பாட்டை இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழாக இழைத்து பெருமை சேர்த்திருக்கின்றனர். தமிழர்கள் வாழ்ந்த நிலங்களை, ஐவகையாக வகுத்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என அவற்றின் இயல்பு நிலைக்கு ஏற்ப கலை உணர்வை ஊட்டி பலகலைவகைகளை படைத்துள்ளனர். அந்தவகையில் பழந்தமிழ்க் கூத்து, கிராமியகலையென விரிந்து பல இசைநுணுக்கங்களுடன், நாடக, நடன அமைப்புக்களை உருவாக்கி வளர்ச்சி பெற்றுள்ளனர். அதற்கு ஓர் சிறந்த எடுத்ததுக்காட்டாக சாட்சியளித்து, தமிழர் கலைக்கு பெருமை சேர்ப்பது "சிலப்பதிகாரம்" ஆகும்.

இத்தகைய மேன்மை வாய்ந்த இனமான தமிழினம், இன்று புலம் பெயர்ந்து வாழும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்த சரிவு நிலையில் இருந்து, எமது சந்ததியினரை காக்க உருவாக்கப்பட்ட தாய்மடிதான்" தமிழ்க்கல்விக்கழகமாகும்". யேர்மனியில் கடந்த இருபத்தொரு வருடங்களாக தமிழ்மொழி, கலைபண்பாடு முதலியவற்றை கற்றுத்தந்து, எமது சிறார்கள் தமிழராக வாழ ஆணிவேராக செயலாற்றுகின்ற "தமிழ்க்கல்விக்கழகம்" நூற்றுமுப்பது தமிழாலயங்களுக்கு மேலாக நிர்வாகித்து வருகிறது. இந்த தமிழர் கல்விச்சேவையில் நடனக்கலை ஆசிரியராக பல தமிழாலயங்களில் பணியாற்றும் பேறு பெற்றுள்ளேன். அந்த வகையில் வூப்பெற்றால் தமிழாலயத்தின் நடன ஆசிரியையாக, இருபது வருடங்களாக செயல்படுவதோடு, நிர்வாகியாக திகழும், திருமதி நகுலேஸ்வரி சிவநாதன் அவர்களின் நேர்த்தியான, அன்பான வழிநடத்தலோடு எமது நடன வகுப்பு மிகச் சிறப்புடன் நடைபெறுவதில் மிகவும் மகிழ்வடைகின்றேன்.

எமது மாணவ, மாணவிகளைப் பற்றி இந்த வேளையில் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். தொண்ணூற்றியோராம் ஆண்டு முதல் இன்று வரை எம்மிடம் பயின்றமாணவர்களும், பெற்றோர்களும் தமது முழுமையான ஒத்துழைப்பை நல்கியதோடு, எம்மால் ஏற்படுத்தப்பட்ட, பல பொது நிகழ்வுகளில் பங்காற்றி, மிகுந்த சிரத்தையோடு நடனத்தை கற்றுக்கொண்டுள்ளார்கள். அனைத்துலக தமிழ்க்கலைத்தேர்வின் பாடத்திட்டத்திற்கமைய, எமது நடன வகுப்புகள் நடத்தப்படுவதோடு, அவற்றின் தேர்வுகளில் பங்கு கொண்டு மிகச் சிறப்பாக எமது மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். அத்தோடு இருமாணவிகள் "அனைத்துலகத்தமிழ்கலைத்தேர்வின்" ஆற்றுகை வெளிப்பாட்டுத் தேர்வின் தரம் ஏழுக்கான சித்தியை பெற்றுள்ளனர்.

ஆடற்கலையின் அதியுயர் பட்டப்படிப்புக்காக நான் இந்தியா செல்லும் போது, எனது துணை ஆசிரியையின் வழிநடத்தலில், நடனவகுப்பின் கட்டுக்குலையாமல் பொறுப்போடு கற்றுவரும் மாணவர்களையும், அவர்தம் பெற்றோர்களையும், பெருமிதத்தோடு இதயத்தில் அமர்த்திக் கொள்கிறேன். இருபதாவது அகவை காணும் வூப்பெற்றால் தமிழாலயம் மேன்மேலும் ஓங்கிவளர மனதார வாழ்த்துகிறேன். அத்தோடு இக்கலைப் பணியை எனக்கு அளித்த தமிழ்க்கல்விக்கழகத்தாருக்கு நன்றி கூறி, இதய நிறைவு பெற்று மகிழ்கின்றேன்.

மனிதம் வாழ கலைகள் படைப்போம்
மானிடம் சிறக்கும் கலையாய் மிளிர்வோம்

நடன ஆசிரியை
திருமதி.சாவித்திரி இம்மானுவேல்
DIP.in Dance B.F.A(M.F.A)
Bharathidasan University

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடனமாணவிகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறையாத நினைவுகள்

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதொன்றும் காணோம் என்று கூறினார் பாரதி. செந்தமிழ், பைந்தமிழ், தண்தமிழ் என போற்றப்படுகின்ற பெருமைக்குரிய “செம்மொழி“ எம் தாய்மொழி. எங்கெல்லாம் தமிழினம் வாழ்கின்றதோ அங்கெல்லாம் தமிழின் பெருமையும் புகழும் உயிரப்புடன் வாழ்ந்துகொண்டே இருக்கிறது. புலம்பெயர்நாடுகளில் தமிழை வளர்க்கும் பணியில் தமிழாலயங்கள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. அந்த வகையில் யேர்மனி வூப்பெற்றால் நகரில் அமைந்துள்ள வூப்பெற்றால் தமிழாலயம் தமது பணியை செவ்வனே செய்து வருகிறது. எங்கள் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 20 ஆண்டுகள்நிறைவு பெறுகின்ற இந்த இனிய வேளையில், என் மனதில் தோன்றிய சில எண்ணங்களை மீட்டுகின்றேன். 20 ஆண்டுகள் எமது தமிழாலயம் நிலைத்து நிற்கிறது என்றால், அதற்கு காரணம் எமது தமிழாலய நிர்வாகியும், அவரது ஆளுமைக்கும், அன்புக்கும் கட்டுப்பட்ட ஆசிரியப்பெருந்தகைகளும், மாணவமணிகளும், பெற்றோர்களும் என்றால் மிகையாகாது. ஒரு கட்டிடம் நிமிர்ந்து நிற்க அத்திவாரம் தேவை, அந்த அத்திவாரம் நன்றாக இருந்தாலும், பலமான தூண்கள் தேவை, அதேபோல் எமது தமிழாலயத்தின் வளர்ச்சிக்கு ஓர் பலமான தூணை தெரிவு செய்து நிறுத்திய எமது கல்விக்கழகத்தின் தந்தை, தமிழேந்தல், திரு. நாகலிங்கம் ஆசிரியர் அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றிகள். அத்துடன் எமது நிர்வாகியுடன் தெரிவு செய்யப்பட்ட சக ஆசிரியர்களும் ஒன்றிணைந்து செயற்ப்பட்டு வருவது எமது தமிழாலய வளர்ச்சிக்கு பெரும் ஊக்குவிப்பாக அமைகிறது.

எமது தமிழாலயம் தமிழ்மொழி, சமயம், சுற்றாடற்கல்வியை வளர்ப்பதோடு, கலையை வளர்ப்பதிலும் முனைப்புடன் திகழ்கிறது. அத்தோடு யேர்மனி மாணவர் அமைப்பினால் நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி தொடர்ச்சியாக 5வருடங்கள் 1வது இடத்தை தக்கவைத்த பெருமைக்குரிய தமிழாலயமாகும். அங்கு நடைபெற்ற விளையாட்டுப்போட்டிகளான குழுவிளையாட்டுகள், நீச்சல்ப்போட்டி, உதைபந்தாட்டப்போட்டிகளில் உன்னத புள்ளிகள் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்நினைவலைகளில் நீங்கதா இடத்தைப் பெற்ற ஓர் சம்பவத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

எமது நிர்வாகத்தால் வருடாவருடம் ஒழுங்கு செய்யப்பட்ட பேருந்தில் சென்று விளையாட்டுத்திடலை அணிமித்ததும், ஏனைய தமிழாலயங்கள் வியந்து நிற்கும் காட்சி என் மனக்கண்முன் இன்றும் ஊசலாடி நிற்கிறது. இத்தகைய பெருமையும், சிறப்பும் நிறைந்த எமது தமிழாலயம் சிறப்போடும், கல்வி, கலைபண்பாடு ஓங்கி வளர்ந்து செழிப்புற்று ஒளிர, எனது மனம் நிறைந்த ஆசிகளை கூறுகிறேன்.

கெங்காதேவி அன்ரன்லிட்வின்
முன்னாள் துணைநிர்வாகி, ஆசிரியை

தமிழாலயம் வூப்பெற்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்வல்லுனர் - வெற்றிப்பாதையில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் உயர்வே தமிழரின் சிறப்பு

ஒரு இனத்தின் அடையாளம் அவ்வினத்தின் மொழியாகும், தாய்மொழியில் தேர்ச்சியடைவதால் ஒரு மனிதன் முழுமையடைகின்றான்.

செம்மொழியான தமிழ்மொழி எம் இனிய தாய்மொழி. இன்றுவரை வளர்த்த மொழி, அன்னிய கலாச்சாரப் பண்பாடுகளில் அகப்பட்டு, அழிந்துவிடக்கூடாது என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதுதான் தமிழாலயம் ஆகும்.

அன்று சிறு விதையாக முளையிட்டு, இன்று பல விழுதுகளாகக் கொண்ட ஆலம்மரம்போல் வீரியமாக நிமிர்ந்து நிற்கின்றன தமிழாலயங்கள். அன்று தமிழாலயம் உருவாக வித்திட்ட "தமிழாலயத்தந்தை" திரு.நாகலிங்கம் ஐயா அவர்களின் அயாராத உழைப்புக்கும் "தமிழ்க்கல்விக்கழகத்தாரின்" அளப்பரிய சேவைக்கும் முதற் கண் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த விழுதுகளில் ஒன்றாக 1991ம் ஆண்டு ஆரம்பிக்கபட்டதுதான் வூப்பெற்றால் தமிழாலயம். எமது தமிழாலயம் 1994ம் ஆண்டிலிருந்து இன்று வரை 17 ஆண்டுகளாக திருமதி. நகுலேஸ்வரி சிவநாதன் அவர்களின் செயற்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றது. எமது நிர்வாகி ஒரு தாயக இருந்து வழி நடத்திச் செல்கிறார். அவரின் தன்னம்பிக்கையும், பொறுமையான அணுகுமுறையும் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. அவரின் நிர்வாகத்திறனும், சிறந்த வழிநடத்தலும், பெற்றோர் மாணவர்களுடன் அணுகும் முறை போற்றுதலுக்குரியது.

17 ஆண்டுகளாக அழியாச் செல்வமான அழகுத் தமிழையும், தமிழ்ப்பண்பாட்டையும், புலம் பெயர் நாடுகளில் வாழும் எமது சிறார்களுக்கு அன்பாக ஊட்டி வளர்க்கும் தூய ஆசிரியப் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தமை பெருமகிழ்ச்சியை தருகிறது. எமது பாடசாலையில் ஆசிரியர்களும், மாணவர்களும் கறுப்பு, வெள்ளை சீருடை அணிந்து வரும்பொழுது தாயகத்தின் பள்ளிக்கால நினைவுகளை என் மனக்கண் நினைவு கூறுகின்றது. அகரத்தை அகிலம் போற்ற வளர்த்து வரும் சக ஆசிரியர்களுக்கும் என் இனிய வாழ்த்துக்கள்.

நூற்றிநாற்பது மாணவர்களை கொண்ட எமது பாடசாலை, வருடா வருடம் நடைபெறும், பொதுப் பரீட்சைகளிலும், தமிழ் திறன் போட்டிகளிலும், கலைநிகழ்வுகளிலும் பங்கு கொண்டு பல பரிசுகளை பெற்று சிறந்த தமிழாலயமாக விளங்குகிறது. இந்த போட்டிகளால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் திறனுடையவர்களாக உருவாகுவதோடு விழாக்களில் நாம் ஒன்று கூடிக் குலாவி, விருந்தோம்பி மகிழ்வது மறக்கமுடியாத தாயக உணர்வை தட்டியெழுப்பும் உணர்வாகும். அத்தோடு இங்கு கற்ற மாணவர்கள் எமது தமிழாலயத்தில் ஆசிரியப் பணியை மேற் கொள்வது உண்மையிலலேயே இளம் சந்ததியினரின் வளர்ச்சிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். எமது தமிழாலயத்தின் வளர்ச்சிக்கு தோளோடு தோள் நின்று உழைத்தவர்கள் எம் பெற்றோர்களாகும். தம் பிள்ளைகள் தாய் மொழித்தமிழை கற்க வேண்டிய அவசியத்தை நன்கு உணர்ந்து எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியிலும் தமது சிறார்களுக்கு தமிழ்கல்வியும், கலைகளையும் கற்க ஊக்குவிப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

வூப்பெற்றால் தமிழாலயம் ஒரே குடும்பம் போல் உயரிய நோக்கிற்காய், ஓரே குடையின் கீழ் செயற்படுவதுடன் மேன் மேலும் சிறப்புப் பெற்று தமிழர் அடையாள சின்னமாக விளங்கி, இன்னும் பல ஆண்டுகள் விழாக்காளைக்காண மகிழ்ச்சியோடு வாழ்த்துகிறேன்.

"தமிழின் உயர்வே தமிழரின் சிறப்பு
தமிழரின் சிறப்பு, தரணி போற்றும் தமிழ்பண்பாடு
தமிழ்ப் பண்பாட்டின் வெளிப்பாடே கலாச்சார விழுமியங்கள்
கல்வியின் சிறப்பு நற்தமிழ் மாணவர்கள்
மாணவரின் சிறப்பு உயர்ந்த தூய பணி செய்யும் ஆசான்கள்"

தமிழாலயம் ஆசிரியை
வூப்பெற்றால்

திருமதி தெய்வரஞ்சனி கிருதரமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்க் கல்விப் பணி தொடர வாழ்த்துக்கள்!



ஒரு இனத்தை அழிக்கவேண்டுமானால் முதலில் அவர்களின் மொழியை அழிக்க வேண்டும். அதன்பின் அந்த இனம் தானாக அழிந்து விடும். இன்று உலகில் 5000ற்கு மேற்பட்ட மொழிகள் இருப்பினும், இரண்டு வாரத்திற்கு ஒரு மொழி அழிந்து கொண்டு போகின்றது என்று ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

பார் எங்கும் பரந்து வாழும் 80 மில்லியன் தமிழர்களை ஒன்றிணைத்து, தமிழினத்தின் வேராகத் திகழ்வது தமிழ்மொழி என்றால் மிகையாகாது. கடல்கள் எம்மை பிரித்தாலும், நாடுகள் நம்மை வேறுபடுத்தினாலும் அன்னைத் தமிழ் எனும் ஆலமரமே நம் அனைவரையும் அரவணைத்து நிற்கின்றது.

தாயகத்தைப் பிரிந்து ஏதிலிகளாய் வாழும் எம் இனத்தின் அடையாளமும், வரலாறும் அழிந்திடாமல் பாதுகாத்திட வேண்டும் என்றால், அவற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும். அதற்கு தாய்மொழிக் கல்வி இன்றியமையாதது.

வெளிநாடுகளில் தமிழ்மொழியை அடுத்த தலைமுறைக்கு ஊட்டும் தமிழ்க் கல்விக் கூடங்களின் பணி ஒரு வரலாற்று கட்டாய தேவையாகும்.

20ம் ஆண்டில் காலடி வைத்திருக்கும் வூப்பெற்றால் தமிழாலயத்தின் கல்விப் பணியை மனதாரப் பாராட்டுவதோடு, அதன் தமிழ்த் தொண்டு மென்மேலும் வளரவேண்டுமென வாழ்த்தி வணங்குகின்றேன்.

"தமிழின் மேன்மை அதன் தொன்மையில் இல்லை - அதன் தொடர்ச்சியில் உள்ளது"

இவண்,

முன்னாள் மாணவன்

**சுதாகர் சிவஞானம்**

(பொறியியலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைப்பாதையில்......







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ரகுராம்..........

ஓர் உன்னதமான, பொறுமையுள்ள, பணிவுள்ள மாணவன். எமது தமிழாலயத்தில் கற்கும் பொழுது, மொழித்திறனோடு விளையாட்டு, கலை முதலியவற்றில் மிகச்சிறப்பாக செயலாற்றியதோடு, எமது தமிழாலய உதைபந்தாட்டம், அணிவகுப்பு போன்றவற்றில் தலைமையேற்று நடாத்திய தலைமைப்பண்பு கொண்டவன். அந்த இனியமாணவனை "சிலம்பு" நாட்டியநாடகத்தில் சோழராஜனாகப் பார்த்து மகிழ்ந்தோம். அமராகிவிட்ட செல்வன் ரகுராம் சிவானந்தராஜா அவர்களை இவ்வேளையில் மிகவும் மன நெகிழ்வோடு நினைவில் பதிக்கின்றோம்.

தமிழாலயம் வூப்பெற்றால்

நிர்வாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வூப்பெற்றால் தமிழாலயத்தில் பதினோராம் ஆண்டு நிறைவு பெற்றவர்கள்

| பெயர் | ஆண்டு |
|---|---|
| திருமதி. சொருபலக்சுமி | 2002 |
| திருமதி. யனுசா பிரதீப் | 2003 |
| செல்வி வஜீரா சிவானந்தராஜா | 2004 |
| செல்வி நிருஜா சூரியகுமார் | 2004 |
| செல்வி தேவகி கிருதரமூர்த்தி | 2004 |
| திருமதி. கார்த்திகா பிரதீப் | 2006 |
| செல்வன் கோகுலன் மோகன் | 2006 |
| செல்வன் பிரதீபன் கனகராஜா | 2008 |
| செல்வி பிரவீனா ஆனந்தராஜா | 2008 |
| செல்வி கார்த்திகா ஈஸ்வரலிங்கம் | 2008 |
| செல்வி லாவண்யா செல்வநாயகம் | 2008 |
| செல்வி சிந்துஜா மகேந்திரராஜா | 2008 |
| செல்வி அர்ச்சனா தர்மகுலசிங்கம் | 2009 |
| செல்வன் அஸ்வரன் இராமநாயகம் | 2009 |
| செல்வன் மகிந்தன் கீதபொண்கலன் | 2009 |
| செல்வி பவித்திரா சந்திரதாஸ் | 2009 |
| செல்வன் பிரவீன் கிருதரமூர்த்தி | 2009 |
| செல்வி சிரோண்யா வீரவேல் | 2010 |
| செல்வி ஆரபி நாகரட்ணம் | 2010 |
| செல்வன் றொசான் மதனாகரன் | 2010 |
| செல்வி சிவாஹினி சந்திரமோகன் | 2010 |
| செல்வி துளசி தர்மகுலசிங்கம் | 2010 |
| செல்வி பிரவீனா நகுலேஸ்வரன் | 2010 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழாலயமும் நானும்

25.01.1992ம் ஆண்டு எனது ஐந்தரை வயதுப்பருவத்தில், தாய்தந்தையருடன் சென்றுவந்த வூப்பெற்றால் தமிழாலயம், இன்று 20ம் ஆண்டு அகவையைக் கொண்டாடுகிறது. 2004ம் ஆண்டு எனது 10. 2வகுப்பைச் சித்தியெய்தினேன். தமிழாலய நாட்களில், தமிழ்திறன்போட்டி, விளையாட்டு, நாட்டுகூத்து ஆகியவற்றில் பங்குகொண்டேன். நான் பாவடைசட்டை அணிவதை பார்த்து எனது பெற்றோர் தமது பாடசாலை நாட்களை நினைவுகூர்ந்ததையும், எனது அப்பா அம்மம்மா மற்றும் தாயகத்தில் உள்ள உறவுகளுடன் தமிழ் கதைக்கவும், சங்கீதம், நடனம், கற்கவும், படங்கள் நாடகங்கள் தொலைகாட்சியில் பார்த்து புரிந்து கொள்ள உறுதுணையாக இருந்த தேன்தமிழை, கசடறகற்க உதவிய தமிழாலயத்தையும் இதனை உருவாக்க மூலவேராக இருந்த திரு.நாகலிங்கம் ஐயா அவர்களையும், இங்கு கற்பித்த ஆசிரியர்களையும் இன்றும், சிறார்களை தமிழ் கற்க அனுப்பும் பெற்றோரையும், ஆசிரியர்களையும் மற்றும் தற்போதைய பிரச்சனைகளுக்கு மத்தியிலும் கொண்டு வழி நடாத்தும் நிர்வாகத்தினருக்கும், தமிழக்கல்விக்கழகத்திற்கும் நன்றி கூறி தமிழாலயம் நல்ல ஒரு இடத்தில் மிகவிரைவில் அமைந்து தனது சேவையை செய்யவேண்டும் என மனதார வாழ்த்துகிறேன். வாழ்கபல்லாண்டு.

"கடமையைச் செய் பலனை எதிர்பாரதே"
ஆரம்பகால மாணவி




கார்த்திகா மோகன்
திருமதி கார்த்திகா பிரதீப்
(Medizinisch-Technische- Radiologie-Assistentin)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் மொழியே எமது அடையாளம்

நாம் தமிழர்கள், தமிழைக் கற்கவேண்டியது எமது முக்கிய கடைமைகளில் ஒன்றாகும் என்பதை, எனது தாய் தந்தையர் ஊட்டி வளர்த்தனர். வூப்பெற்றாலில் அமைந்துள்ள தமிழாலயத்தில் என்னை சேர்த்ததோடு, அங்கு பயிற்றுவிக்கப்படும் தமிழ்மொழி, சமூகக்கல்வியோடு நடனவகுப்பிலும் என்னை இணைத்துவிட்டனர். சிறுவயதில் இருந்தே எனது தாய் மொழியை கற்று வரும் நான் தமிழைப் பேசி, எழுதி, வாசிக்கும் தகுதியைப் பெற்றேன்.

புலம் பெயர்ந்த தமிழர்கள் தாய்மொழியை கற்கவேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு "தமிழ்க்கல்விக்கழத்தால்" உருவாக்கப்பட்ட "தமிழாலயமான" வூப்பெற்றால் தமிழாலயம் இருபதாவது அகவை காணுவது எமக்கு பெருமையாகும். எமது தமிழாலயத்தில் பதினோராம் ஆண்டு கற்கும் நான் "தமிழ்க்கல்விக்கழத்தால்" நடாத்தப்படும் தமிழ்திறன் போட்டிகளில் பங்குபற்றி உரையாற்றல், கவிதை போன்றவற்றில் முதாலம் இடத்தை யேர்மன் ரீதியில் பெற்றமை என் வாழ்நாளில் மாறக்கமுடியாத மகிழ்வாகும். சிறுவயதில் இருந்தே என்னை ஊக்கிவித்த தமிழாலய நிர்வாகி அவர்களையும், ஆசியர்களையும் இக்கணம் நன்றி உணர்வோடு பார்க்கிறேன்.

யேர்மனி நாட்டில் பிறந்து வளர்ந்தாலும் எனது தாய் மொழியான தமிழைக் கற்றதால், தமிழர் என்ற அடையளாத்தை உணரக்கூடியதாக இருக்கிறது. அத்தோடு எனது ஆசிரியை திருமதி சாவித்திரி இம்மானுவலிடம் நடனம் கற்று எமது கலைகளை உணர்ந்து வாழும் சிறப்பை ஏற்படுத்தித்தந்த தமிழாலய வழிகாட்டல், எனது ஆழ்மனதில் தமிழர் பண்பாட்டை ஏற்படுத்திய விடயமாகும். நாம் தமிழர் என்ற அடையாளத்தை எம்முள் பதித்த தமிழாலயத்தை இதய பூர்வமாக வணங்குகிறேன்.



செல்வி. சகான மனோகரன்
தமிழாலயம்
வூப்பெற்றால்
(11ம் ஆண்டு மாணவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலராண்டு, சிறுவர்நிலை ஆசிரியர்களும் மாணவர்களும்




1ம் ஆண்டு ஆசிரியரும் மாணவர்களும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ம் ஆண்டு ஆசிரியையும் மாணவர்களும்




## 3ம் ஆண்டு ஆசிரியையும் மாணவர்களும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4ம் ஆண்டு ஆசிரியையும் மாணவர்களும்




5ம் ஆண்டு ஆசிரியைகளும் மாணவர்களும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6ம் ஆண்டு ஆசிரியையும் மாணவர்களும்



2011

7ம் ஆண்டு ஆசிரியையும் மாணவர்களும்



2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8ம் ஆண்டு ஆசிரியையும் மாணவர்களும்



2011

## 9ம் ஆண்டு ஆசிரியையும் மாணவர்களும்



2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10ம் ஆண்டு ஆசிரியையும் மாணவர்களும்



2011

## 7ம் ஆண்டு ஆசிரியரும் மாணவர்களும்



2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுப்பெற்றால் தமிழாலய நிர்வாகம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித இயல்பில் நன்றி உணர்வு இல்லாவிடின் மனிதம் அழிந்து, பண்பாடு சிதைந்து விடும். நன்றி உணர்வு தூய்மையான அன்பையும், வாழ்வையும் பெருக்கும் என்பது சாத்தியமாகும். இருபதாவது அகவை காணும் இந்த இனியவேளையில், எமது நிர்வாகம் சார்பாக தமிழ்க்கல்விக் கழகத்திற்கு நன்றி கூறிக்கொள்வது எமதுதலையான கடமையாகும். புலம் பெயர்ந்து வாழும் எமது சிறார்களின் இன அடையாளம் மாறாமல், தமிழாராய் வாழ்வதின் மூலவேராய் திகழும் தமிழ்க்கல்விக்கழகமும், அதன் பொறுப்பாளர் தமிழேந்தல் திரு.நாகலிங்கம் ஐயா அவர்கட்கும், எமது நடுவகப்பெறுப்பாளாராக வழிநடாத்தும் திரு.லோகானந்தம் அவர்கட்கும், நடுவக செயற்பாட்டுப்பிரிவு பொறுப்பாளர்கள் அனைவர்க்கும் நன்றி கூறவதில் உளம்பூரிக்கிறோம். அத்தோடு கடந்த காலங்களில் எம்மோடு தோள்கொடுத்து தூண்களாய் செயலாற்றிய நிர்வாகிகள், துணைநிர்வாகிகள், பெற்றோர்நிர்வாகிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கிறோம். இன மொழிப் பற்றோடு இருபதாவது அகவை நேரத்தில் செயலாற்றி வரும் உதவிநிர்வாகிக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்நிர்வாகிக்கும், உளச்சுத்தியோடு எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். தங்கள் சிறார்கள் தமிழராய் வளரவேண்டும் என்ற உன்னத நோக்கோடு தமது பிள்ளைகளை தமிழாலயத்தில் தமிழ்கற்க அழைத்து வந்து இன்றுவரை எம்மோடு தோள் கொடுத்து நிற்கும் பெற்றோர்களையும், மொழிப்பெற்றோடு கற்கும் மாணவர்களையும் நன்றி உணர்வோடு இதயத்தில் ஏற்றிக்கொள்கிறோம். இந்த இனிய விழா சிறப்பாக நடைபெற ஊக்கியாய் நின்று செயற்பட்டு இராப் பகலாய் செயலாற்றியா விழா இதழ் வடிவமைப்பாளர்கள் அனைவர்க்கும், தாயுணர்வோடு உணவுகள் சமைத்து உதவியவர்களுக்கும், அரங்க அமைப்புக்கு உதவியவர்களுக்கும், ஒலி ஒளி நிழற்படம் போன்றவற்றை கலையேற்றி மூலம் பதித்தவர்க்கும், எமது விழா சிறப்புற அமைய உரிமையோடு ஒத்துழைத்த வூப்பர் மண்டப செயற்பாட்டாளர்கள் அனைவருக்கும் இந்தவேளை நன்றிகூறிக் கொள்வதில் வூப்பெற்றால் தமிழாலய நிர்வாகம் அக மகிழ்கிறது.

நிர்வாகம்
தமிழாலயம் வூப்பெற்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org